பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

சுடர் 5 பிரமோதூத ஸு புரட்டாதி மீ 11 உ. வியாழக்கிழமை (27-09-1990) ஹிஜ்ரி 1410 ற. அவ்வல் 07 கதிர்: 208

# யாழ். கோட்டையை புலிகள் கைப்பற்றினர்!

## நேற்றிரவு அமைதி

கடந்த மூன்றரை மாதங்களின் பின்னர் நேற்று மாலைக்குப் பின்னராக யாழ் நகரில் அமைதி நிலவியது. ஷெல், குண்டு வேட்டுச் சத்தங்கள் ஓய்ந்து போயிருந்தன.

நேற்று முன்தினம் இரவு கோட்டை முகாமை கைவிட்டுப் படையினர் பின்வாங்கிச் சென்ற பின்னர் நேற்றுமாலை 3 மணியளவில் நகருக்கு வந்த ''அவ்ரோ'' விமானம் பீப்பாய் குண்டுகளை வீசியது. [அ-5]

## உக்கிர தாக்குதல்களை அடுத்து ராணுவம் பின்வாங்கிச் சென்றது

யாழ்ப்பாணம், செப்டெம்பர் 27

ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படைகள் வசமிருந்த யாழ்ப்பாணம் கோட்டையை விடுதலைப் புலிகள் நேற்றுக் கைப்பற்றினர்.

நீண்ட — உக்கிர — சண்டையின் பின்னர் அங்கிருந்த படையினர் பின்வாங்கி மண்டைதீவுக்குச் சென்றனர்.

ஜூன் மாதம் 16 ஆம் திகதி தொடக்கம் சுமார் மூன்றரை மாதங்களாக யாழ். கோட்டைக்காக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசாங்கப்படைகளுக்கும் இடையில் நடந்த யுத்தம் நேற்றுடன் முடிவுக்கு வந்தது.

கடந்த திங்கள், செவ்வாய்க் கிழமை இரவுகளில் நடந்த உக்கிரச் சண்டையின் பின் ஸ்ரீலங்காப்படையினர் கோட்டையை விட்டு வெளியேறினர்.

அதனைத் தொடர்ந்து நேற்று நண்பகல் விடுதலைப் புலிகளின் கொடி கோட்டையில் ஏற்றப்பட்டது.

யாழ். கோட்டை வீழ்ந்தது சம்பந்தமாக தமிழீழ விடுதலைப் புலிகளால் நேற்று விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

370 வருடங்களுக்கு மேலாக தமிழீழ மண்ணை ஆக்கிரமித்து நின்ற—ஆக்கிரமிப்புச்

[4 ஆம் பக்சம் பார்க்க]

## வாசகர்களுக்கு

நேற்றுமாலை உதயன் வெளியிட்ட விஷேட பதிப்பில் பிரசுரமான சில செய்திகளும் இன்றைய இதழில் இடம்பெற்றுள்ளன என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகிறோம்.

## மூன்று புலிகள் வீரமரணம்

யாழ்ப்பாணம், செப். 27

யாழ் கோட்டையை மீட்பதற்காக விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் மூன்று விடுதலைப் புலிகள் வீரமரணமடைந்தனர்.

பெண்புலி இரண்டாவது லெப்டினட் சிசிலியா (யூடினா பகீரதகுமார் - மன்னார்), லெப்டினட் நகுலன் (இராசதுரை நேசன் - வதிரியான் வடக்கு), ரகு (இராசலிங்கம் றொபேட் சாந்தகுமார்- கட்டுடை, மானிப்பாய்) ஆகியோரே வீரமரணமடைந்தவர்கள். (உ-3)

## முஸ்லிம் பகுதியில் குண்டு

நேற்று நண்பகல் அவ்ரோ வீசிய குண்டினால் கொட்டடியிலும், முஸ்லிம் வட்டாரத்திலும் உள்ள சில வீடுகள் பலத்த சேதம் அடைந்தன. (உ-7)

## மண்டைதீவும் காலி!

யாழ்ப்பாணம், செப். 27

கடந்த மாத இறுதியில் அமைக்கப்பட்ட மண்டைதீவு இராணுவ முகாமில் இருந்து ஸ்ரீலங்கா இராணுவத்தினர் வெளியேறிக் கொண்டிருந்தனர்.

யாழ். கோட்டையை விடுதலைப் புலிகள் கைப்பற்றியதைத் தொடர்ந்தே, இராணுவத்தினர் மண்டைதீவில் இருந்தும் வெளியேறினர்.

நேற்றுக் காலை முதல் மாலை வரை மண்டைதீவில் இருந்த படையினர் ஹெலி மூலம் பலாலிக்குக் கூட்டிச் செல்லப்பட்டனர். (அ)

## திலீபன் மறைந்த வேளை கோட்டையில் புலிக்கொடி!

யாழ்ப்பாணம், செப். 27

நேற்று காலை சரியாக 10 48 மணிக்கு — மூன்று வருடங்களுக்கு முன்னர் — திலீபன் மரணித்த அதே வேளையில் விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்டத் தளபதி பானு யாழ். கோட்டையில் புலிக்கொடியை ஏற்றி வைத்தார். திலீபனின் கனவுகளில் ஒன்றை அவர் நிறைவேற்றி வைத்தார்.

கோட்டை வாயிலில் நிற்கும் அரச மரம் ஒன்றின் உச்சியில் புலிக்கொடி பறக்க விடப்பட்டிருந்தது (உ)

## மிதிவெடி, கண்ணிவெடி அகற்றும் பணியில் புலிகள்

கோட்டைக்குள்ளும், கோட்டைச் சுற்றாடல் பகுதியிலும் ஸ்ரீலங்கா படையால் புதைக்கப்பட்டிருந்த மிதிவெடிகள் மற்றும் கண்ணிவெடிகளை அகற்றும்பணியில் விடுதலைப் புலிகள் நேற்று ஈடுபட்டிருந்தனர்.

அதனால் மக்கள் கோட்டைப் பகுதிக்குள் செல்ல நேற்று அனுமதிக்கப்படவில்லை.

தொடர்ந்தும் கண்ணிவெடிகளை அகற்றும் வேலைகள் நடைபெறுவதால் மக்கள் அங்கு நடமாட வேண்டாம் என்று புலிகள் தெரிவித்துள்ளனர். (உ-3 6)

## கோட்டையைப் பார்க்க மக்கள் முண்டியடிப்பு

புலிகளின் வசம் வீழ்ந்த யாழ் கோட்டையைப் பார்க்க நேற்றுமாலை மக்கள் அங்கு முண்டியடித்துக்கொண்டு சென்றனர்.

கே. கே. எஸ். வீதியூடாக மக்கள் சத்திரச் சந்திக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

சத்திரச் சந்திக்கு அப்பால் செல்ல அவர்கள் அனுமதிக்கப்படவில்லை, [உ-3-6]

## வெடி கொழுத்தி மக்கள் நகரில் ஆரவாரம்!

யாழ். கோட்டைப் பகுதி புலிகளிடம் வீழ்ந்த செய்தி நேற்று நண்பகல் யாழ். நகரப் பகுதியில் பரவியதும், ஆங்காங்கே வெடிகள்கொழுத்தப்பட்டன.

மக்கள் கூடி நின்று இந்தச் செய்தி குறித்து ஆரவாரத்துடன் பேசிக் கொண்டு நின்றதையும் காணமுடிந்தது.

நேற்று நண்பகலுக்குப் பின்னர் நகரில் வழமையான குண்டுச் சத்தங்களுக்குப் பதிலாக மக்கள் கொழுத்திய வெடிகளின் சத்தமே கேட்டன. (உ)

## திலீபன் நினைவு நாள் நேற்று உணர்ச்சியுடன் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், செப். 27

தமிழர் விடிவுக்காக வீரசுவர்க்கமடைந்த தியாகி திலீபனின் 3ஆவது ஆண்டு நினைவு நாள் நேற்று உணர்ச்சி பூர்வமாகக் கொண்டாடப்பட்டது.

குடாநாட்டின் பல பகுதிகளிலும் திலீபனின் உருவப் படம் தாங்கிய ரதம் வலம் வந்தது. மக்கள் வீட்டுவாசல்களில் கும்பம் வைத்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள்.

உண்ணாவிரதங்களும் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தன.

கல்வியங்காட்டில் நேற்றுக் காலை திலீபனின் நினைவாக ஸ்தூபி திறந்து வைக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து பொதுக் கூட்டமும், உண்ணாவிரதமும் நடைபெற்றன.

நேற்று கடைகள் யாவும் மூடப்பட்டிருந்தன சன நடமாட்டம் குறைந்திருந்தது.

வீதிகள் தோறும் தோரணம், வாழை கட்டப்பட்டிருந்தன. (இ-3-6)

## காணக் கண்ணீர் வடியும் உருக்குலைந்த யாழ். நகரம்!

யாழ்ப்பாணம், செப். 27

மூன்றரை மாதங்களுக்கு முன்னர் பார்த்த யாழ்ப்பாண நகரத்தை இப்போது நீங்கள் பார்க்க முடியாது! அன்றைய நகரம் கட்டடங்கள் வானுயர்ந்து நிற்க, வர்த்தகம் சிறந்திருந்த நகரம். இன்றைய நகரமோ இடிபாடுகளே எச்சமாகஉள்ள உருவம் [Landscape] மாறிய சிதைந்த பிரதேசம்; சுடுகாடும் தோற்றுப்போகும் அளவுக்கு அழிந்துவிட்டது.

அந்தோ! அதன் விதியும் இதுவானதோ என்று பொது மக்களைக் கலங்க வைக்கும் காட்சிகள். எங்கும் அழிவின் விஸ்தாரம்.

இந்தத்திசையால்போனால்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## யாழ். ஆஸ்பத்திரி விவகாரம்; சகல தரப்புகளுடனும் பேச்சு!

### செஞ்சிலுவைச்சங்க அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம், செப். 27

''யாழ்-ஆஸ்பத்திரியை மீள இயக்குவது குறித்து இன்னும் முடிவு செய்யப்படவில்லை. தொடர்ந்தும் இதுசம்பந்த [illegible] பேச்சுக்கள் நடைபெறுகின்றன''

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரி ஒருவர் மேற்கண்டவாறு உதயனுக்கு தெரிவித்தார்.

அந்த அதிகாரி மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்-ஆஸ்பத்திரியையும், கோட்டையையும் பொறுப்பேற்குமாறு அரசால் நேற்று எமக்குத் தெரிவிக்கப்பட்டது.

கோட்டை எமக்குத் தேவை

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

தமிழ், ஆங்கிலம், தட்டச்சு இயந்திரங்கள் (Type-writers) விற்பனைக்குண்டு Fudo EnterPrises. (Siva Studio Upstair) பிரதான வீதி, மானிப்பாய் (Bank அருகாமையில்) [சி-5220]

மிளகாய்த்தூள், மஞ்சள் மா, புளுக்கொடியல் மா, உழுந்து மா, ஓாசாகவும், பக்கட்டாகவும் பெற்றுக் கொள்ள அன்னை கோப்பிக் கடை திருநெல்வேலி. [இ-5214]

## "நிலவே நீ மயங்காதே"

மீரா வெளியீடு "இந்திரா பிரியதர்ஷினி" எழுதியது தவிக்கும் பெண்மனம், தடுமாறும் பெண்மனம், செய்வதறியாது திகைக்கும் பெண் மனங்களை இந்நாவலில் சந்தியுங்கள். 40/ரூபா. துர்க்கா ஸ்ரேசனேர்ஸ், சுன்னாகம், ஸ்ரீகாந்புத்தகசாலை நல்லூர், [14335]

## கோழித்தீன்

கோழித்தீன் வகைகள் கலந்து கொடுக்கப்படும், மூலதார பொருட்கள் அரைத்து கொடுக்கப்படும். எம்மிடம் கண்டல் பட்டை சில்லறையாகவும், மொத்தமாகவும் பெற்றுக் கொள்ளலாம் சிவா மில்ஸ் அன் இன்டஸ்றீஸ், 46/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். [14247]

## இடமாற்றம்

அரஸ் ஜவுளியகம் இல: 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம் மண்டேலா ரேடர் (புத்தகசாலை) இல, 2, பஸ்நிலையம் ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் ஆகியன தற்போது இல, 256, பருத்தித்துறை வீதி, (நல்லூர் தேரடி முன்பாக) நல்லூர் யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இயங்குகின்றன என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். [13938]

## போட்டோஸ்ரற்

போட்டோஸ்ரற் பிரதிகளை பெற்றுக் கொள்ள கிளீன்கட் 37, சிவகுருநாதன் வீதி, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் வேலை நேரம்: 10 மணி முதல் 3 மணி வரை. (சி/5218)

## ஷெல்லினால் இளம் பெண் காயம்

யாழ்ப்பாணம், செப். 27

நேற்று முன்தினம் இரவு மண்டைதீவிலிருந்து ஏவப்பட்ட ஷெல் ஒன்று ஆனைக்கோட்டை பீடாரி கோவிலுக்கு அண்மையில் விழுந்து வெடித்ததில் ஒரு இளம் பெண் காயமடைந்தார். சில வீடுகள் சேதமடைந்தன. (உ-6)

## சுதுமலையில் வெடிக்காத பீப்பாய்க் குண்டு

யாழ்ப்பாணம், செப். 27

நேற்றுக் காலை சுதுமலை அம்மன் கோயிலுக்கு சமீபமாக அவ்ரோ விமானம் வீசிய பீப்பாய்க் குண்டு வெடிக்காத நிலையில் மீட்கப்பட்டது (இ-7)

---

## அறிவித்தல்

சகல பொதுச்சபை உறுப்பினர்களுக்கும்

யாழ். மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க

# விஷேட பொதுக்கூட்டம்

## விதி 18 (1) ன் கீழ்

யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரால் கூட்டுறவுச் சங்கங்களின்விதி 18(1)ன் கீழ் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கமைவாக பொன்னம்பலம் கணேசலிங்கம்-தலைமைக் காரியாலயக் கூட்டுறவுப் பரிசோதகர் ஆகிய நான் மேற்படி கூட்டுறவுச் சங்கத்தின் விஷேட பொதுக் கூட்டம் ஒன்றினை இத்தால் அழைக்கின்றேன்.

காலம்:- 29-09-1990 (சனிக்கிழமை) காலை 9மணி
இடம்:- காரியாலய மண்டபம்

நிகழ்ச்சி நிரல்:

1. கடவுள் வணக்கம்
2. சென்ற கூட்ட அறிக்கை வாசித்தல் (18 (1) ன் கீழானது)
3. கட்டுப்பாட்டுச் சபையின் காலம் நீடித்தல் பற்றி ஆராய்தல்.

தனிப்பட்ட அழைப்பிதழ் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளது.

பொ. கணேசலிங்கம்
[தலைமைக் காரியாலயப் பரிசோதகர்]

[சி/5221]

---

# 6ஆம் மாத நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

## திருமதி நாகமுத்து துரைச்சாமி

தோற்றம்: 07 - 02 - 1925

மறைவு: 01 - 04 - 1990

எம்மையெல்லாம் இவ்வுலகில் தோற்றுவித்து நல்வாழ்வு தந்த எமது குடும்பத்தின் ஒளிவிளக்கு திருமதி நாகமுத்து துரைச்சாமி அவர்கள் இவ்வுலக வாழ்வை நீத்து இறைவனடி சேர்ந்தபோது கலங்கி நின்ற எங்களது துயரிற் பங்கு கொண்டு ஆறுதல் தந்த உற்றார், உறவினர், நண்பர்கள், யாவருக்கும் மலர்மாலைகள்சாத்தியும், அனுதாபச்செய்திகள் அனுப்பியும் எம்மைப் பெருமைப்படுத்திய சகல அன்புள்ளங்களுக்கும் எமது நன்றி என்றும் உரியது.

இன்று எமதில்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திக்கான அந்தியேட்டி, வீட்டுக் கிரியைகளில் பங்குகொண்டு மதிய விருந்தருந்தி எம்மை மகிழ்விக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

'பழமுதிர்ச்சோலை'
11 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு. (14334)

---

# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்: 29 - 06 - 1953

நோயின் பிடியில்: 27 09 - 1980

## திருமதி புஷ்பராணி தணிகாசலம்

சின்ன வயதிலெனைத் தனியே விடுத்து நீ
சிவன் பாதம் சேர்ந்தது நீதியோ அம்மா?
செய்வதறியாது தவிக்கின்றேனே
சொல்லி அழச் சோதரருமில்லை
மீளவும் ஒரு முறை இம்மண்ணிலே வாராயோ
பதினாயிரம் ஆண்டுகள் சென்றிடினும்
உமது நினைவின் சுவடுகள் நீங்காது
உமது ஆத்மா சாந்தியடைய அஞ்சலி செய்யும்

அன்பு மகன்
நிஷாந்தன் [பாபு]

489, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம். [14326]

---

## தேவை

கூரைக்குப் பாவிக்கப் பொருத்தமான கல்வனைஸ்ட் தகரங்கள் தேவை. விலை விபரங்களுடன் கீழ்க்காணும் முகவரியில் உடன் தொடர்பு கொள்ளவும்.

உதயன்,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

---

# இடமாற்றம்

வடமாகாண நீர்ப்பாசன ஊழியர்கள் அனைவரும் தத்தமது பகுதிகட்கு சென்று தங்கள் கடமைகளை மேற் கொள்ளுமாறு வேண்டப்படுகிறார்கள். பரந்தனில் இயங்கி வந்த பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் பணிமனை தற்காலிகமாக முல்லைத்தீவு வீதியில் உள்ள வை. எம். சி. ஏ கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பொ. கந்தசாமி,
பிரதிப் பணிப்பாளர் [நீர்ப்பாசனம்]
வடமாகாணம்.

[சி/5224]

---

## இடமாற்றம்

யாழ்ப்பாணம் 95/2, ஸ்ரான்லி வீதியில் இயங்கி வந்த பிறிமா கால்நடை உணவு விநியோகஸ்தர்களான நொதேர்ண் ரேடர்ஸ் ஸ்தாபனம் தற்பொழுது

**43/2, மணல் தரை லேனில் இயங்குகின்றது**

என்பதனை வாடிக்கையாளர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம். எம்மிடம் சகல கால்நடை உணவுகளையும் பிறிமா உணவு வகைகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

# நொதேர்ண் ரேடேர்ஸ்

[14318]

---

உ
சிவமயம்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

# நூற்றாண்டு நிறைவு நாள்

29 — 09 — 1990 சனிக்கிழமை

மு. ப. 8. 30 மணி

அருள்மிகு சிவஞான வைரவர் கோவிலில் சிறப்பு வழிபாடு.

மு. ப. 9. 30 மணி

வாழ்த்துரைகள்

மு. ப. 10. 30 மணி

சிறுவர்களுக்கு ஏடு தொடக்கம், மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், முன்னாள் ஆசிரியர்கள், பெற்றோர்கள், அபிமானிகளை அன்புடன் அழைக்கின்றோம்.

க. சி. குகதாசன்.
அதிபர்

சு. டிவகலாலா
செயலாளர் ப. மா. ச.

க. பூபாலசிங்கம்
செயலாளர் பா. அ. ச.

---

# நன்றி நவிலல்

செல்வி

## கமலாதேவி குமாரசிங்கம்

செல்வி கமலா தேவி குமாரசிங்கம் 20 - 09 - 90 வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் கோண்டாவில் கிழக்கு மயானத்தில் 21 - 09 - 90 அன்று 1 மணிக்கு தகனம் செய்யப்பட்டது. அன்னாரின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

கு. யதார்தநாதன் [குழந்தை]
தாய், சகோதரிகள், சகோதரர்கள்,
மைத்துனர், மைத்துனிமார்.

கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். [14328]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெற்கில் மீண்டும் ஜே.வி.பி

கொழும்பு, செப். 27

தென்னிலங்கையில் மீண்டும் ஜே. வி. பி. அமைப்பு தீவிரமாக இயங்கத் தொடங்கியிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

ஸ்ரீலங்கா இராணுவத்தினர் வடக்கு, கிழக்கில் தமது கவனத்தைத் திருப்பத் தொடங்கிய பின்னர் தெற்கில் ஜே. வி. பி. இயக்கம் புத்துயிர்ப்புப் பெற்றதாக அச் செய்திகள் மேலும் கூறின.

''இன்னும் நாம் உயிருடன் இருக்கிறோம்'' — இப்படிக் கூறும் ஜே. வி. பியினரின் சுவரொட்டிகள் இலங்கையின் தென் பகுதியில் உள்ள குக் கிராமங்களில் ஒட்டப்பட்டுள்ளன என்று 'ஏசியாவீக்' வார சஞ்சிகை தெரிவித்துள்ளது.

தென் பகுதியில் ஜே. வி. பியினரின் அரசியல் வகுப்புகள் கிராமங்களில் இடம் பெற்று வருவதாகவும் —

ஜே. வி. பி. சந்தேக நபர்கள் என்று கருதப்படும் 7 ஆயிரத்து 200 பேரை அடைத்து வைத்துள்ள தடுப்பு முகாம்களில் கூட அரசியல் வகுப்புகள் நடத்தப்படுவது தெரியவந்திருப்பதாகவும் 'ஏசியாவீக்' சஞ்சிகை தெரிவித்துள்ளது.

''அவர்கள் நிச்சயமாகத் திரும்பி வருவார்கள்'' — என்று இராணுவ அதிகாரி ஒருவர் கூறினார்.

ஜனாதிபதி பிரேமதாஸவும் இது குறித்து நிச்சய மற்ற நிலையிலேயே உள்ளார்.

அரசு அதிகாரிகள் மத்தியில் ஜனாதிபதி பிரேமதாஸ பேசுகையில் —

''சில ஜே. வி. பியினரை சிறைக்கு அனுப்பியதன் மூலம் பயங்கரவாதத்தை அடக்கி விட்டோம் என்று உங்களுக்குள் நீங்களே திருப்தி கொள்ளாதீர்கள். வெறும் நம்பிக்கையாகத் தான் அது முடியும்'' — என்று குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு - கிழக்கில் சண்டையிட தென்பகுதியில் இருந்து இராணுவம் வாபஸ் வாங்கப்பட்டதைத் தொடர்ந்து, தடுப்பு முகாம்களில் இருந்து விடுதலையான ஜே. வி. பி. உறுப்பினர்கள் சிலர் மீண்டும் செயல்பட ஆரம்பித்துள்ளனர்.

— இப்படி 'ஏசியாவீக்' சஞ்சிகை ''நிழலில் இருந்து திரும்பு'' — என்ற தலைப்பிலான கட்டுரையில் தெரிவித்துள்ளது. (உ-எ)

## செவ்வாய் இரவு தாக்குதல்!

நேற்று முன்தினம் செவ்வாய் இரவு யாழ். கோட்டைப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும், ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் உக்கிரமான போராட்டம் நடந்தது.

திங்கள் இரவு நடைபெற்ற சண்டையை விட செவ்வாய் மிகவும் கனமான தாக்குதல்கள் இடம்பெற்றன.

திங்கள் இரவு பத்து மணியளவில் ஆரம்பித்த மோதல் அதிகாலை நான்கு மணி வரையும் ஓயவில்லை. நகரமும் அதன் அயற்புறங்களும் அதிரும் அளவுக்கு ஷெல், துப்பாக்கி சத்தங்கள் மக்களைக் கலங்க வைத்தன. ஹெலி, அவ்ரோ, பொம்மர்களும் தங்கள் கூத்திரத்தனத்தைக் காட்டின.

நேற்றுக் காலையில் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட இராணுவ பொறுப்பாளர் பானு, கோட்டையில் புலிக்கொடியை ஏற்றிக் கொண்டிருந்த சமயம் கடலிலிருந்து, ஏவப்பட்ட ஷெல் ஒன்று 50 யார் தொலைவில் விழுந்து வெடித்தது.

## ஷெல்லினால் வீடுகள் சேதம்

யாழ்ப்பாணம், செப். 27

நேற்று புதன் காலை 12 மணியளவில் யாழ். வைமன் வீதியில் விழுந்த ஷெல்லுக்கு ஒரு வீடும் மதில்களும் சேதமடைந்தன.

அதேசமயம் செவ்வாய் இரவு விழுந்த ஷெல் ஒன்றினால் நாவலர் வீதியில் வீடு ஒன்று சேதம் அடைந்தன. (இ)

## உதயன்

### யாழ்ப்பாணம் கோட்டை

மூன்றரை மாத யுத்தத்தின் பின்னர், வரலாறுகள் பொதிந்த யாழ்ப்பாணம் கோட்டை நேற்றுக் காலையில் விடுதலைப் புலிகளிடம் வீழ்ந்தது.

அதைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் கோட்டையில் புலிக்கொடி ஏற்றப்பட்டது உரிமைப் போரில், உண்ணா நோன்பிருந்து, உயிர் நீத்த தியாகி திலீபனின் மூன்றாவது ஆண்டு நினைவு தினத்தில் யாழ்ப்பாணம் கோட்டை தமிழர் வசம் வந்தது சிறப்புமிகு பொருத்தமாக அமைந்து விட்டது

யாழ்ப்பாணம் கோட்டை மீண்டும் தமிழர் வசம் வரும், அங்கு தமிழ்க்கொடி பறக்கும் காலம் வெகு தூரத்தில் இல்லை என்று திலீபன் மூன்று வருடங்களுக்கு முன்னர் கண்ட கனவு நனவாகி விட்டது.

இந்த யாழ்ப்பாணம் கோட்டை இப்போது இராணுவ முக்கியத்துவம் இல்லாத இடம் என்பது உண்மை தான். ஆனால் தமிழர்களைப் பொறுத்த வரையில் அது ஓர் அடிமைச் சின்னம்

சுமார் 375 ஆண்டு காலச் சரித்திரத்தில் அது போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர், சிங்களவர்கள் என்று வேறினத்தாரின் ஆட்சிக்கு அணி செய்யும் சின்னமாக விளங்கியது.

போர்த்துக்கேயர் யாழ் கோட்டையைக் கட்டுவதற்கு முன்னர், அந்தப் பகுதியில் தமிழர்களின் கொடி பறந்ததை நாம் மறந்துவிட முடியாது [illegible] நிலை ஏற்பட்டிருப்பது தமிழர்களுக்குப் பெரும் மகிழ்ச்சியைத் தரும் என்பதில் ஐயமில்லை.

அதுவும், கடந்த பல ஆண்டுகளாக நகரின் இராணுவ முகாமாக இருந்து, அடக்கு முறையாளர்களின் அடாவடித்தனங்களுக்குக் கருவூலமாக விளங்கி, தமிழர்களைக் கொன்று குவிக்கக் காரணமாகத் திகழ்ந்தது இதே கோட்டை என்பதையும் யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் மறந்து விட முடியாது.

இனிமேல் எந்நேரத்திலும், எச்சந்தர்ப்பத்திலும் யாழ் கோட்டை வெளியாரின் இராணுவக் கொத்தளமாக மாறாமல் இருக்கப் பார்த்துக் கொள்ள வேண்டும் அது தமிழர்களின் தலையாய கடமை

யாழ், கோட்டையிலிருந்து ஸ்ரீலங்கா படையினர் வெளியேற்றப் பட்டதைக் கேட்டு, யாழ். நகர மக்கள் வெடி கொளுத்தி ஆரவாரம் செய்ததைப் பார்த்தபோது, கோட்டை இனிமேலும் இராணுவக் கொத்தளமாவதற்கு அனுமதிக்கக்கூடாது என்பதையே அது பிரதிபலிப்பதாகக் கொள்ள முடிந்தது,

ஏனெனில் கடந்த மூன்று மாதங்களாக மட்டுமன்றி பல வருடங்களாகவே கோட்டை யாழ்ப்பாண மக்களின் கொலைக்களச் சூத்திரபீடமாக விளங்கியது, அதனால் கோட்டையிலிருந்து இராணுவம் வெளியேற்றப்பட்டது என்ற செய்தி அவர்களுக்கு உயிர் வந்த உணர்வைக் கொடுத்தது எனலாம்.

இப்போது தமிழர் வசம் வீழ்ந்திருக்கும் யாழ். கோட்டையை இனிமேலும் [illegible] பிறரின் இராணுவ [illegible]மாக மாறாமல் பார்த்[illegible] கொள்வோமாக.

# பாரபட்சமாக நடத்தப்படுவதாக ஜோர்தானிலுள்ள தமிழர் புகார்

அம்மான், செப். 27

தாம் பாரபட்சமாக நடத்தப்படுவதாக ஜோர்தானின் தலைநகரான அம்மானில் தங்கி உள்ள இலங்கைத் தமிழர்கள் பலரும் கருதுகிறார்கள்.

அம்மானில் இலங்கையர் தங்கி உள்ள அகதிமுகாமுக்கு விஜயம் செய்த யு. என். ஐ. செய்தியாளர் மேற்கண்டவாறு தெரிவிக்கிறார்.

ஈராக்கில் இருந்தும் குவைத்தில் இருந்தும் வெளியேறி அம்மானில் தங்கி உள்ளவர்களில் பலர் இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள யுத்த நிலைமையைக் கருத்தில் கொண்டு இலங்கை திரும்புவதற்கு தயங்குகின்றனர்.

குவைத்திலிருந்து அம்மான் வந்துள்ள சுமார் 2 ஆயிரத்து 200 இலங்கையர்களில் 250பேர் தமிழர்.

யு. என். ஐ. செய்தியாளர் இலங்கையர் தங்கி இருந்த முகாம் பகுதிக்குச் சென்று தமிழர்களிடமும், சிங்களவர்களிடமும் கருத்துக்களைக் கேட்டறிந்தார்.

இலங்கைத் தமிழர்கள் இங்கு (அம்மானில்) பாரபட்சத்துடன் நடத்தப்படுகின்றனர் என்று ராஜேந்திரன் என்ற இலங்கைத் தமிழர் யு. என். ஐ. செய்தியாளரிடம் தெரிவித்தார்.

தமிழர்கள் ராணுவ கூடாரங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளபோது, சிங்களவர்கள் ஒரு கிறிஸ்தவ தேவாலயத்தில் உள்ள பெரிய அரங்கில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

சிங்களவர்கள் தமிழர்களுக்கு தண்ணீர் கூட தருவதில்லை என அவர் கூறினார்.

தங்களுக்கு தண்ணீர் வசதி கழிப்பிட வசதி உள்ளிட்ட எந்த வசதியும் இல்லை என்று அவரும் வேறு இருவரும் யு என். ஐ. செய்தியாளரிடம் கூறினர்.

அருகிலுள்ள சிங்களவர்களை அணுகி தமிழர்களை ஏன் பிரித்து வைத்திருக்கிறீர்கள் என யு. என். ஐ. செய்தியாளர் கேட்ட போது 'அவர்கள் எங்களில் ஒரு பகுதியினர் அல்லர் அவர்கள் தனிநாடு கேட்கிறார்கள். அதனால் அவர்கள் தனியாக முகாம் அமைத்துக் கொள்ளட்டும். நாங்கள் ஏன் அவர்களுக்கு உதவ வேண்டும்'' என ஒரு சிங்களவர் திருப்பிக் கேட்டார்.

'நாங்கள் கொழும்பு செல்ல விரும்பவில்லை' என சின்னப்பா என்னும் இளைஞர் கூறினார் இந்தியாவுக்கு அனுப்பப்பட வேண்டும் என்றுதான் எல்லோரும்விரும்புகிறோம். இல்லாவிட்டால் நாங்கள் கொழும்பு போகும் போது ஒரு படுகொலை சம்பவம் நடக்கக்கூடும்'' என அவர் மேலும் கூறினார்.

ஒவ்வொரு விமானத்திலும் 250 சிங்களவர்கள் ஏற்றப்பட்டால் ஐந்து தமிழர்களைத்தான் ஏற்றுவது என்ற அளவுக்கு 'பாரபட்சம், அதிகமாகி விட்டது என முத்துசாமி என்பவர் சொன்னார். [இ]

# ராஜீவ் கொலை முயற்சி குறித்து அதிகாரிகளுக்கு முன்னரே தெரியும்

## தாக்கிய சிப்பாய் வெளியிட்ட திடுக்கிடும் தகவல்

கொழும்பு, செப். 27

1987 ஜூலையில் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட கொழும்பு வந்திருந்த இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி, அங்கு அணி வகுப்பு மரியாதை ஒன்றை ஏற்கும்போது கொலை முயற்சிக்கு இலக்கானார் அல்லவா?

இந்தக் கொலை முயற்சியில் தாம் ஈடுபடவிருந்தது தமது உயர் அதிகாரிகளுக்கு ஏற்கனவே தெரிந்திருந்தது என்று அந்தக் கொலை முயற்சியில் ஈடுபட்ட ஸ்ரீலங்கா கடற்படையின் முன்னாள் சிப்பாய் விஜயமுனி ரோஹண விஜேவீரா தெரிவித்திருக்கிறார்.

ராஜீவை கொலை [illegible] முயன்றதாகக் கைது செய்யப்பட்ட இந்தச் சிப்பாய்க்கு இராணுவ விசாரணைக்குப் பின்னர் 6 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

ஆனால் ஜனாதிபதி பிரேமதாஸா அளித்த பொது மன்னிப்பின் கீழ் அவர் விடுவிக்கப்பட்டார்.

சமீபத்தில் இந்தச் சிப்பாய் கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு பேட்டியளித்துள்ளார். அந்தப் பேட்டியில் அவர் கூறியிருப்பதாவது:-

ராஜீவைக் கொல்ல நான் திட்டமிட்டது உயர் அதிகாரிகளுக்கு முன்பே தெரியும். ராஜீவ்காந்திக்கு அளிக்கப்படும் அணிவகுப்பு மரியாதைக்கான குழுவில் சேர்க்கப்பட்டால் அவரைக் கொலை செய்ய முயற்சிப்பேன் என்று [illegible] எனது கருத்தை சில சகாக்களும் ஏற்றுக்கொண்டனர்.

ஆனால், நடவடிக்கைகளுக்கு அஞ்சி அந்த முயற்சியில் அவர்கள் ஈடுபடவில்லை. எனது வழக்கு சிவில் நீதிமன்றத்தில் நடந்திருந்தால் நான் வெற்றி பெற்றிருப்பேன்.

### தனிப்பட்ட எதிரியல்ல

ராஜீவ்காந்தி எனக்கு தனிப்பட்ட முறையில் எதிரி அல்லர். இலங்கை விவகாரத்தில் அவர் தலையிட்டதுதான் அவரது குற்றம். நான் ஓர் இந்திய வீரனாக இருந்து, இலங்கைத் தலைவர் எவராவது இதுபோல் செய்து இருந்தால் அப்போதும் இதே போல் செய்திருப்பேன்.

தனது நிழல் அசைவில் இருந்து தான் தாக்கப்படப் [illegible]வதை ராஜீவ்காந்தி உணர்ந்து விலகியிருக்கக் கூடும். இதனால் அவர் தப்பி விட்டார் — என்றார். [உ]

## காணக்-----

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

முன்னர் இருந்தது எந்தவீதி? இது எங்கே இட்டுச் செல்கிறது? என்று நகரை முன்னர் ''கரைத்துக் குடித்து'' அதன் பூகோளம் தெரிந்தவர்களும் கேட்கும் அளவுக்கு அது உருக்குலைந்திருக்கிறது.

எங்கும் இடிபாடு, வீழ்ந்த சுவர்கள், கட்டடப் பொருள்கள் உடைந்த சிதறல்கள் என்று அழிந்த நகரமாகக் காட்சிதரும் யாழ்ப்பாண நகரைப்பார்க்க கண்ணீர் மல்குகிறது!

வான்தாக்குதலின் கோரத்தனம் எவ்வளவு கொடூரம் நிறைந்தது என்பதை எடுத்துரைத்து யாழ்ப்பாண நகரம் அழுது கதறுகிறது!

அரச நிறுவனங்கள், தனியார் சொத்துக்கள் என்ற பாகுபாடு இல்லாமல் ஸ்ரீலங்கா அரசின் விமானங்களும், குண்டுகளும் யாழ்நகரைச் சித்திரவதை செய்து சின்னாபின்னமாக்கியுள்ள கொடுமை கொடிதிலும் கொடுமை.

[illegible]ந்த வீதியில், எந்தப் ப[illegible]யில் எந்தவிதக் கட்டடம் மிஞ்சியிருக்கிறது என்று நாம் உங்களுக்குச் சொல்ல . . ?

ஆஸ்பத்திரி வீதியில், நவீன சந்தை உட்பட எல்லாக் கட்டடங்களும் இடிந்து விழுந்து விட்டன. யாழ் ஆஸ்பத்திரியின் பல பகுதிகளும் தரையில் கிடக்கின்றன. மின்சார நிலையமும் தப்பவில்லை. அந்த வீதியில் உள்ள சகல வங்கிக் கட்டடங்களும் சேதமுற்றுள்ளன.

யாழ் பஸ்நிலையம் இருந்த இடம் தெரியாமல் மாறுபட்டு கிடக்கிறது. அதனை அண்டியிருந்த கட்டடங்களும் சரி

மின்சார நிலைய வீதியில் ராணி தியேட்டர் உட்பட பல கடைகள் தரை மட்டமாகி உள்ளன.

மணிக்கூட்டு வீதியில் வெலிங்டன் தியேட்டர், கட்டடப் பொருள் கூட்டுத்தாபனம் உட்பட பெருமாள் கோவில் வரை பல கட்டடங்கள் வீழ்ந்து கிடக்கின்றன.

கஸ்தூரியார் வீதி, கே. கே. எஸ். வீதி என்பனவற்றிலும் கட்டடங்கள்பல இடிந்து வீழ்ந்ததால் வானமும் நிலமும் நேர்நேராகப் பார்க்கின்றன.

மருந்துக்கடைகள், நகைமாளிகைகள், புடவைக்கடைகள், இரும்புக்கடைகள், பாத்திரக் கடைகள் என்று எதையும் நகரில் பார்க்க முடியவில்லை.

ஸ்ரான்லி வீதி - நாவலர் வீதி வரை விமானங்கள் தமது வெறித்தனத்தைக் காட்டியுள்ளன.

இது யாழ்ப்பாண நகரமா? பெரியகடைப் பக்கமா? என்று ஐயுறும் அளவுக்கு நகரம் துவம்சமாக்கிச் சிதைக்கப்பட்டுள்ளது! அழகாக இருந்த நகரம் அழிந்து அசிங்கப்பட்டுள்ளது! (அ-3-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேற்று காலைக் குண்டுவீச்சில் 2 வீடுகள், 3 கடைகள் சேதம்

யாழ்ப்பாணம், செப். 27

நேற்று (புதன் கிழமை) 6.30 மணியளவில் யாழ். முத்திரைச்சந்தியில் பொம்மர் ஒன்று மேற்கொண்ட தாக்குதலில் இரண்டு வீடுகளும், நான்கு கடைகளும் சேதம் அடைந்தன.

நேற்றுக்காலை ஆறுமணி அளவில் சீனச்சகடை விமானம் முதலில் வந்து கோட்டைப்பகுதியில் குண்டுகளை வீசியது.

முன்பு குண்டு வீசிய கட்டடங்களை அந்தச் சகடை விமானம் மீண்டும் வீசி முற்றாக அழித்தது.

அதைத் தொடர்ந்து 6.30 மணி அளவில் வந்த பொம்மர் விமானமே முத்திரைச் சந்தியில் குண்டை வீசியது.

# ஹெலி வீசிய குண்டுகளினால் செந்நிறமாக மாறிய யாழ். நகர்!

யாழ்ப்பாணம், செப். 27

யாழ். நகரப் பகுதியில் நேற்று அதிகாலை 1.45 மணி அளவில் ஹெலியில் இருந்து தீப்பிளம்பு போன்ற இரு குண்டுகள் வீசப்பட்டன.

இதுவரை காலமும் ஹெலியில் இருந்து வேட்டுக்கள், கிரனேட்டுகள், றொக்கட் மோட்டார்கள், ஷெல்லுகள் கொண்டே தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

ஆனால் நேற்று புதன் அதிகாலை வீசப்பட்ட குண்டுகள் புதுவகையில் காணப்பட்டன. நெருப்புப் பிழம்பு போல் வீசப்பட்ட குண்டுகள் பலத்த சத்தத்துடன் வெடித்தன. இக்குண்டுகள் வெடித்த போது யாழ் நகரமும் வானமும் சுமார் மூன்று வினாடிகளுக்கு மேல் செந்நிறமாகக் காட்சி அளித்தன.

(இ-6-3)

## உடுப்பிட்டியில் குண்டு வீச்சு! இளம் பெண் மரணம்!!

யாழ்ப்பாணம். செப். 27

உடுப்பிட்டி சந்தியில் நேற்று காலை ஆறு மணிக்கு பொம்மர் மேற்கொண்ட தாக்குதலில் இளம்பெண் ஒருவர் பலியானார். அறுவர் காயமடைந்தனர்.

நேற்றுக் காலை6 மணி அளவில் இரண்டு பொம்மர்கள் உடுப்பிட்டிப் பகுதியை வட்டமிட்டு குண்டுகளை வீசின.

இந்தச் சம்பவத்தில் புஷ்பம் சிவலிங்கம் (வயது 18) என்னும் இளம் பெண்ணே மரணமானவர்.

அவரின் குடும்பத்தைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை சிவலிங்கம் (வயது 55), இராஜேஸ்வரிசிவலிங்கம்(வயது 48) சி. சுமதி (வயது 20), சி. சத்தியபாமா (வயது 13), கோபாலசுந்தரம் பரஞ்சோதி (வயது 58), சிவமணி பரஞ்சோதி (வயது 50) ஆகியோர் காயமடைந்து மந்திகை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தக் குண்டு வீச்சால் இமையாணன் பிள்ளையார் கோவிலும், 10 வீடுகளும், 3 கடைகளும் சேதமடைந்தன.

(இ 3-15)

## மானிப்பாயில் நேற்று விழுந்த பீப்பாய்க் குண்டு

யாழ்ப்பாணம், செப் 27

மானிப்பாய்ப் பகுதியில் நேற்று அதிகாலை 2 மணிக்கு வட்டமிட்ட 'அவ்ரோ' விமானம் அப்பகுதியில் பீப்பாய்க் குண்டு ஒன்றைத் தள்ளி விட்டுச் சென்றது.

மானிப்பாய் அந்தோனியார் கோவிலுக்கு அண்மையில் உள்ள வளவு ஒன்றில் விழுந்த இந்தக் குண்டு வெடிக்கவில்லை இதனால் பெரும் சேதம் தவிர்க்கப்பட்டது.

[உ-15]

## யாழ். கோட்டை--

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சின்னங்களில் ஒன்றான — யாழ். கோட்டை இன்று அதிகாலை எம்மால் கைப்பற்றப் பட்டு விட்டது.

இக்கோட்டை ஆக்கிரமிப்பாளரின் இருப்பிடம்—ஆக்கிரமிப்பின் சின்னம் — என்ன விலை கொடுத்தேனும் இதை கைப்பற்றியே தீருவோம் என்ற உறுதியை இன்று நிறைவேற்றிவிட்டோம்.

இந்த இராணுவ வெற்றியானது தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வெற்றிப் பாதையில் ஒரு வரலாற்றுத் திருப்புமுனையை ஏற்படுத்தியுள்ளது.

நேற்று நள்ளிரவு 12 மணியளவில் யாழ். கோட்டை முகாம் மீது உக்கிர தாக்குதல் ஒன்றைத் தொடுத்தோம். சுமார் இரண்டரை மணி நேர தாக்குதலைத் தொடர்ந்து கோட்டையின் தென்புறப் பகுதியிலிருந்து சிறுகடல் வழியாக மண்டைதீவிற்குச் சமீபமாகவுள்ள சிறுத்தீவிற்கு இராணுவத்தினர் தப்பி ஓடினர்.

அங்கு வைத்தும் தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்டு, காலை 5 30 மணியளவில் அனைத்துப் படையினரும் மண்டைதீவிற்கு விரட்டப் பட்டனர்.

"இந்தக் கோட்டையில் என்று புலிக்கொடி பறக்கின்றதோ அன்றுதான் எமது சுதந்திர விடிவின் ஆரம்பம்" என்ற லெப். கேணல் திலீபனின் கூற்று அவனது 3ஆவது ஆண்டு நினைவு நாளன்று நிறைவேறியது குறிப்பிடத் தக்கதோர் அம்சமாகும். — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ]

# மரண அறிவித்தல்கள்

## நாகமுத்து நாகம்மா

[கொட்டடி]

கொட்டடி சீனி[illegible]கம் றோட்டைச் சேர்ந்த நாகமுத்து நா[illegible] 5-09-1990ல் நயினாதீவில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற நாகமுத்துவின் அன்பு மனைவியும், அன்னலட்சுமி, தங்கராசா, நாகராசா, காலஞ்சென்ற தைரியலெட்சுமி, நாகபுஷ்பம், நாகரெத்தினம்ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற ரெத்தினம், கணபதிப்பிள்ளை, அன்னபூரணம், சின்னம்மா, அருட்சக்தி ஆகியோரின் அன்பு மாமியாரும் திருமதி மயில்வாகனம், தங்கைச்சி அம்மாவின் சகோதரியும், திருமதி தில்லையம்பலம் ராசரெத்தினத்தின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நயினாதீவில் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
நா. நாகராசா.

பிரம்படி லேன்
கொக்குவில்,

[14338]

## சின்னத்துரை [சாமி] இலட்சுமி

மயிலிட்டி தெற்கைச் சேர்ந்த திருமதி சி இலட்சுமி 25-09-90 அன்று காலமானார். இவர் ப. சின்னத்துரையின் அன்பு மனைவியும், நேசமலர் (விரிவுரையாளர் கோப்பாய் ஆசிரிய கலாசாலை), நேசதுரை (சீமெந்துக் கூட்டுத்தாபனம் காங்கேசன்துறை), தர்மசீலன் (கனடா), பரமநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், கனகலிங்கம் (ஆசிரியர் சாவகச்சேரி இந்துக்கல்லூரி), சகுந்தலா (அல்வாய்), வசந்தாதேவி (ஆசிரியை கொட்டாஞ்சேனை முஸ்லிம் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியுமாவார். அன்னாரின் பூதவுடல் 25-9-90 காலை 11 மணிக்கு கொத்தியாகல மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

மயிலிட்டி தெற்கு,
தெல்லிப்பழை.

தகவல்:
சி அருணாசலம் J. P.

[14340]

## மீட்கப்பட்ட ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், செப். 27

யாழ். கோட்டையை மீட்பதற்கு விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல்களின் போது நேற்றுவரை பின்வரும் ஆயுதங்கள் அரசபடையினரிடமிருந்து மீட்கப்பட்டதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆர் பி. ஜி - 1, ஆர். பி. ஜி ஷெல் -4, ஏ கே. எல். எம். ஜி. - 1, ரி 56 ரக துப்பாக்கிகள் - 2 ரி 81 ரக துப்பாக்கி -1, 40 எம் எம். டொங்கான் - 1, [illegible]ம் மகஸின் - 1, வெடிக்க வைக்கும் கருவிகள் - 2, ரவைக்கூடுகள் - 7, கைக் குண்டுகள் -2.

ஆயுத மீட்புத்தொடர்வதாகத் தெரிவிக்கப்பட்டது. [அ]

## மானிப்பாயில் பணி புரியும் கிராம சேவையாளர்கள்

யாழ் நகரப் பகுதியைச் சேர்ந்த கிராம சேவையாளர்கள் இன்றுமுதல் மறு அறிவித்தல் வரை மானிப்பாய் நகரசபை மண்டபத்தில் கடமையாற்றுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜே /81 - கோட்டை, ஜே /83 - சொட்டடி, ஜே/84 நாவாந்துறை தெற்கு. ஜே /85-நாவாந்துறை வடக்கு ஜே /71 - குருநகர் மேற்கு ஜே /72 - சின்னக்கடை, ஜே /68 - குருநகர் கிழக்கு ஜே /69 - குருநகர் மேற்கு ஜே /76 சுண்டுக்குளி வடக்கு ஆகிய பகுதிகளுக்குரிய கிராம சேவையாளர்களே மானிப்பாயில் பணிபுரிவார்கள்.

மேற்குறிப்பிட்ட பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் தமது கிராம சேவையாளர்களை காலை 9 மணி தொடக்கம் அங்கு சந்திக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-6)

## 4 இளைஞர் வெட்டி கொலை

யாழ்ப்பாணம், செப். 27

அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்று கிராமத்தில் செவ்வாய்க்கிழமை படையினர் மேற்கொண்ட தேடுதலின் போது எட்டுத் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப் பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் நால்வர் முகாமுக்கு கொண்டு செல்லும் வழியில் வெட்டிக்கொலை செய்யப் பட்டு நீர்த்தேக்கத்தில் போடப்பட்டதாகவும்—

மீதியான நால்வருக்கு என்ன நடந்தது என்பது குறித்து நேற்றுவரை தகவல் ஏதும் இல்லை என்றும்— விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3)

## 5 வீடுகள் சேதம்

நேற்று அதிகாலை 1.30 மணி அளவில் 'அவ்ரோ' விமானத்திலிருந்து போடப் பட்ட பீப்பாய்க் குண்டினால் கில்னர் ஒழுங்கையில் இரண்டு வீடுகள் சேதமுற்றன.

விமானச் சத்தம் கேட்டதும் அப்பகுதி மக்கள் பதுங்கு குழிகளுக்குள் தஞ்சம் புகுந்திருந்ததால் உயிர்ச்சேதங்கள் தவிர்க்கப்பட்டன.

(உ-143)

## சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், செப். 27

மட்டக்களப்பு சவளக்கடையில் கடந்த சனிக்கிழமை வயலில் அறுவடை செய்யச் சென்ற ஐந்து தமிழ் விவசாயிகள் ஸ்ரீலங்கா படைகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

விடுதலைப் புலிகள் வட்டாரங்களில் இருந்து இத்தகவல் தெரியவந்தது. (உ-3)

## அரியாலையில் [illegible]வேட்டு

யாழ்ப்பாணம், செப். 26

அரியாலைப் பகுதியில் இன்று மதியம் 12 மணியளவில் ஹெலி வேட்டுக்களை தீர்த்தது.

அதிகாலையில் இருந்து ஹெலிகள் மண்டை தீவுக்கும் பலாலிக்கும் இடையில் திரிந்த வண்ணமே இருந்தன.

மக்கள் ஹெலிகளைக் கண்டதும் பாதுகாப்புத் தேடினார்கள். ஆனால் ஹெலிகள் தாக்குதல் நடத்தவில்லை.

திடீரென அரியாலைப் பகுதியில் ஹெலி வேட்டுக்களை தீர்த்ததும் மக்கள் கிலி கொண்டு ஓடினார்கள்.

(இ-3-6)

## யாழ். ஆஸ்பத்---

(1 ஆம் பக்கந் தொடர்ச்சி)

யில்லை யாழ். போதனா வைத்தியசாலையை மீளத் திறக்கவே நாம் முயற்சி மேற்கொண்டுள்ளோம்

சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்ந்து பேச்சுக்கள் நடைபெறுகின்றன. நாம் சில விடயங்களைத் தெரிவித்துள்ளோம். அந்த விடயங்கள் இரு தரப்பாலும் ஏற்கப்பட்ட பின்பு தான் வைத்தியசாலையைப் பொறுப் பேற்போம்— என்றார் அவர்.

(அ-3)

## குருநகரிலும் சேதம்

யாழ்ப்பாணம், செப். 27

நேற்று அதிகாலை 'அவ்ரோ' வீசிய குண்டினால் குருநகர் தொடர்மாடிக் கட்டடப் பகுதி பலத்த சேதம் அடைந்தது

கடற்படையினர் நடத்திய பீரங்கிக் குண்டுத் தாக்குதலினால் இக்கட்டடம் ஏற்கனவே சேதம் அடைந்திருந்தது தெரிந்ததே.

(உ-7)

# OBITUARY

## Mr. A. C. SELVARAJ

(Retired Co-Operative Inspector)

The death is announced of Mr A. C. Selvaraj (Retired Co- Operative Inspector) beloved husband of Mrs. Pushpam Selvaraj (Retired Teacher of Hartley College Point Pedro), loving father of Mr. A. C. Selvaraj Dilip (Inspector of Police), loving father-in-law of Mrs Dilip Shanthi on 23-09-90.

The funeral service was held on 24-09-90 at 2.00 p m at his residence.

Informant:-
Mrs. Pushpam Selvaraj.

"Pushpa Cottage",
Puloly West.
Puloly.

[C-5223]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 229/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 27-09-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org